# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி குறித்து நாளேடுகள் வழங்கும் நற்செய்திகள்!




## திண்டுக்கல் கிழக்கு — மேற்கு மாவட்டங்களில்

# கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு நன்றி!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல், மே. 1 -

திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டங்களில். கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்கள்.

இதுகுறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத் தலைவர், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணியின் சார்பில் கழக வேட்பாளர்களாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட





கழக துணை பொதுச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி (ஆத்தூர்), திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், உணவுத்துறை அமைச்சர் அர.சக்கர பாணி (ஒட்டன்சத்திரம்), திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் (திண்டுக்கல்), வேடசந்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வீரா.எஸ்.டி.சாமிநாதன் (வேடசந்தூர்), கழக உறுப்பினர் திருமதி.ச.நாகஜோதி (நிலக்கோட்டை), தமிழர் தேசியம் கட்சி நிறுவனர் கே.கே.செல்வக்குமார் (நத்தம்) மற்றும் பழனி தொகுதியில் அரிவாள், சுத்தியல், நட்சத்திரம் சின்னத்தில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ந.பாண்டி ஆகியோருக்காக பிரச்சாரத்தில் உழைத்த திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனைவரும் கழகத் தலைவர், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற சாதனைகளை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத்துக்கூறி கண் துஞ்சாது தேர்தல் பணி மேற்கொண்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், ஆதரவு இயக்கங்கள், தோழர்கள் உள்ளிட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் கழக துணை பொதுச் செயலாளர் இ.பெரியசாமி அவர்களின் சார்பாகவும் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பாகவும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

## சேலம் மத்திய மாவட்டக் கழக

# வாக்கு எண்ணும் முகவர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் — அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், மே.1 -

சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்குட்பட்ட சேலம் வடக்கு, சேலம் தெற்கு, சேலம் மேற்கு மற்றும் ஓமலூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் முகவர்கள் கலந்துரையாடல் கூட்டமானது நாளை (02.05.2026 - சனிக்கிழமை) மாவட்



டக் கழக அலுவலகம் “கலைஞர் மாளிகை”யில் கீழ்க்கண்ட நேரங்களில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு நியமிக்கப் பட்டுள்ள வாக்கு எண்ணும் முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

நேரம், சட்டமன்றத் தொகுதி - காலை 10.00 மணி - சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி, சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி, சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி, பிற்பகல் 03.00 மணி - ஓமலூர் சட்டமன்றத் தொகுதி

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## 234 தொகுதிகளுக்கான

# தபால் வாக்குகள் பிரித்து மாவட்ட வாரியாக ஒப்படைப்பு!

திருச்சி, மே. 1 -

தமிழகத்தின் 234 தொகுதிகளுக்கான தபால் வாக்குகளைபிரித்துமாவட்டவாரியாக அந்தந்தத் தொகுதி தேர்தல்நடத்தும்அலுவலர்களிடம் ஒப்படைக்கும் இரண்டாம் கட்ட பணி திருச்சி சிறப்பு மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு,தமிழகம் முழுவதும்தபால்வாக்குகள் வழங்கப்பட்டு, தேர்தல் பணியாற்றும்அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பதிவுசெய்யப்பட்டதபால் வாக்குகளை தேர்தலை உரிய சட்டப் பேரவை தொகுதிக்கு அனுப்புவதில் உள்ளசிரமங்களைகருத்தில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தேர்தல் அலுவலர்களால் பெறப்பட்டதபால்வாக்குகளைப் பிரித்து வழங்க பொதுவான சிறப்பு மையமாக திருச்சி மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு திருச்சி மத்திய பேருந்துநிலையம் அருகேஉள்ளகலையரங்கம் மஹாலில்இதற்கானஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இங்கிருந்து ஏப். 13ஆம் தேதி அந்தந்த தொகுதிகளுக்கான தபால் வாக்குச் சீட்டுகள், உறுதிமொழிப் படிவம் அந்தந்த மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது தொடர்ந்துஇங்கு,ஏப்.20ஆம் தேதிமுதல்கட்டமாகதபால் வாக்குகளை பிரித்து வழங்கும் பணி நடைபெற்றது.

**2-ஆம் கட்டம்:**

இந்நிலையில்,இரண்டாவது கட்டமாக 38 மாவட்டங்களுக்கான தபால் வாக்குகளை பிரித்து வழங்கும் பணி செவ்வாய்க் கிழமை (ஏப்.28) நடைபெற்றது.

இந்தப் பணியை கூடுதல் தலைமைதேர்தல்அலுவலர் அ.சிவஞானம் தொடங்கி வைத்தார்.திருச்சிமாவட்ட தேர்தல்அலுவலரும்,ஆட்சியருமான வே.சரவணன் முன்னிலையில் பணிகள் நடைபெற்றன.

மாநிலம்முழுவதும்உள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர். பிறகு தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களுக்கான தபால் வாக்குகள், சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்களால் பிரித்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தபால் வாக்குகளை கவனிக்கும்தொடர்புஅலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் கலந்துகொண்டனர்.


**ஒப்படைப்பு:**

38 மாவட்டங்களுக்கும் பதிவான தபால் வாக்குகள் பிரிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டத்தின்தபால்வாக்குகள் ஒருங்கிணைப்பு அலுவலர்களிடம்ஒப்படைக்கப்பட்டன. திருச்சியிலிருந்து தபால்வாக்குகளைபெற்றுக் கொண்டு அவரவர் மாவட்டங்களுக்குச் சென்று தேர்தல் அலுவலர்களிடம் ஒப்படைத்து அந்தந்த தொகுதியில் சேர்த்திடும் வகை யில் நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது.

## திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டம் தி.மு.க. சார்பில் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நாளை (02.05.2025 - சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் ஆவடி அருகே பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய் கிறிஷ் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

தலைமைச் செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பிடிசி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் வி.ஜெ.சினிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்ச்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் எனவே மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** மே 4 தேதி அன்று 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.